# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
# வத்திராயிருப்பு

**Cr.M.P. 138/2026**

தேதி: 09.03.2026

**PW1**

**சிவரஞ்சனி, க–பெ. தங்கதுரை என்பவரின் பிரமாணவாக்குமூலம்**

நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கும் எனது கணவருக்கும் 2021 வது வருடத்தில் எங்கள் இருவரின் சம்மதத்தின் பெயரில் என்னுடைய வீட்டில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் பொழுது எனது பெற்றோர்கள், எனக்கு 20 பவுன் தங்க நகையும், ரூ. 20,000/– ரொக்கமும், ரூபாய் 1,00,000/– மதிப்பிலான வீட்டு உபயோக பொருட்களும் கொடுத்தார்கள். கடந்த 2022 வது வருடத்தில் ஷர்வீன் குமார் என்ற ஆண் குழந்தையும், கடந்த 2024 வது வருடத்தில் ஷர்வினி தேவி என்ற பெண் குழந்தையும் பிறந்தது.

எனது கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்த காரணத்தினால், ஊருக்கு வரும்பொழுது எல்லாம் மது அருந்தி விட்டு என்னையும் எனது குழந்தையையும் அடித்து துன்புறுத்தி வந்தார். மேலும் எனது பெற்றோர்களிடம் ரூபாய் 2,00,000/– வாங்கி வர வேண்டும் என்றும், இல்லை என்றால் நானும், என்னுடைய குழந்தைகளும் அவருடன் சேர்ந்து வாழ முடியாது என்றும், என்னை கொலை செய்து விட்டு மறுமணம் முடித்துக் கொள்வதாகவும் என்னை மிரட்டி கொடுமை செய்து வந்தார். திருமணம் முடிந்த பின்பு நானும் எனது கணவரும் எனது கணவருக்கு சொந்தமான வீட்டில் வசித்து வந்தோம். என்னுடைய கணவர் வீட்டில், நானும், எனது கணவரின் தந்தை மற்றும் தாயார்

ஆகியோர்கள் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தோம். எனது கணவரின் அக்கா அவ்வப்போது வந்து செல்வார். வரும்பொழுதெல்லாம் அதிக வரதட்சணை வாங்கி வருமாறு என்னிடம் பிரச்சனை செய்து வந்தார்.

எனது கணவரின் குடும்பத்தாரால் எனக்கு ஏற்பட்ட பிரச்சனைக்காக, திருவலிபுத்தூரில் புகார் மனு கொடுத்த போதிலும், எனது கணவர் வெளியூரில் இருந்து வருகின்ற காரணத்தினால் அவரை ஒன்றும் செய்ய முடியாது என்றும், என்னால் முடிந்ததை பார்த்துக் கொள்ளுமாறு கூறினார். வயதான பெற்றோர்களின் அரவணைப்பில் நான் தற்பொழுது எனது குழந்தைகளுடன் இருந்து வருகிறேன். எனது குழந்தைகளின் மருத்துவச் செலவை கூட பார்த்துக் கொள்ள இயலாத நிலையில் இருந்து வருகிறேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஓம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.